**செய்தி வெளியீடு எண்: 279** **நாள்: 23.04.2018**

## செய்தி வெளியீடு

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு''

என்று பாட்டுக்கொரு புலவர் பாரதியார் 'ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகவும்' 'இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றாகவும்' திகழ்ந்து வருகிற சிலப்பதிகாரத்தை வியந்து போற்றுகிறார்!

''சொல்லும் பொருளும் சுவைமிகுந் தூற்றிட
வெல்லும் வகையான் விளம்பிய இளங்கோ
அடிகளார் செய்தநல் அருந்தமிழ்ச் சிலம்பின்
அடிகள் ஒவ்வொன்றும் அருந்தமிழ்த் தேறலாம்!''

சிலம்பினால் விளைந்த காப்பியமான சிலப்பதிகாரம் எனும் நூலை தந்தவர் இளங்கோவடிகள். இந்நூல் புவிபான்கண் வாழும் மானுடஇனம் உணர்ந்து தெளிதற்குரிய முப்பெருங்கருட்பொருட்களை நற்றமிழில் நன்கு குழைத்துத் தந்துள்ளது.

அவையாவன

''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்!''

''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்!''

''ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்!''

மணிமுடி துறந்து, அரண்மனை விடுத்து துறவு பூண்ட சேரர்குல வேந்தன் இளங்கோவடிகளாகிக் காப்பியம் செய்து தந்ததை நாம் பெற்ற பேறாகக் கருத வேண்டும். இளங்கோ, சேரவேந்தன் சேரலாதனின் இளைய மகன்; மூத்தவன் சேரன் செங்குட்டுவன். இவர் இளவரசன் ஆதலால் 'இளங்கோ' என அழைக்கப்பட்டார். துறவு பூண்டதால், 'அடிகள்' என்ற சிறப்புப் பெயருடன் 'இளங்கோவடிகள்' எனச் சிறப்பிக்கப் பெற்றார். இவர் சமண சமயத்தைத் தழுவியவராக இருந்தும், தாம் இயற்றிய நூலில் வைணவத் திருமாலையும், சைவக் கொற்றவையையும் போற்றும் பகுதிகள் அந்தந்த சமயத்தவரால் பெரிதும் போற்றப்படுகின்றன.

‘‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை’’

என பாரதியாரால் புகழப்பெற்ற முப்பெரும் புலவருள் ஒருவர் இளங்கோவடிகள்.

தமிழ்த்தாயின் ஆயிரம் கால அருந்தவத்தின் பயனாம் சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகளின் புகழ்பாட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013ஆம் ஆண்டு இளங்கோவடிகளின் நடையையொட்டிப் புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்பி வருபவருக்கோ இளங்கோவடிகள் விருது வழங்கப்படும் என அறிவித்து, அங்ஙனம் இளங்கோவடிகளின் பெருமையை தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பறைசாற்றினார் (அரசாணை (நிலை) எண்.118, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ1.2) துறை நாள்.13.08.2014).

அதைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 2017–2018ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கம்பர் மற்றும் இளங்கோவடிகள் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப் பெற்றுச் சிறப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அல்லும் பகலும், அன்னைத் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட சங்க இலக்கியப் புலவர்கள் தொடங்கி, இக்கால இலக்கியப் புலவர்கள் வரை அனைவரையும் பெருமைப்படுத்துவதைத் தமிழ்நாடு அரசு தனது இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறது. அவ்வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளினை ‘‘இளங்கோவடிகள் திருநாள்’’ ஆகக் கருதி அன்று சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள இளங்கோவடிகள் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்தும் சிலைக்கு அருகில் அவரின் திருவுருவப்படம் வைத்து மலர் தூவியும் சிறப்புச் செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிவிப்பிற்கிணங்க, சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள இளங்கோவடிகள் சிலைக்கு 24.04.2018 அன்று காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து, மலர்தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**